Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | STC 494/2022 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | Pw2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ராதாகிருஷ்ணன் |
| Father's Name | -- | சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 23rd October 2024..

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

## முதல் விசாரணை :

நான் இவ்வழக்கில் அ.சா.1ற்கு ஆதரவாக சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையொப்பம் இட்டேன். அதில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்காணும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்கிறேன்.

| | | |
|---|---|---|
| 1 | 02.04.2022 ம் தேதியிட்ட சாய் ராம் ஹெல்த் கேர் நிறுவனத்தின் இன்வாய்ஸ் | பு.சா.ஆ.5 |
| 2. | ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது.) | பு.சா.ஆ.6 |
| 3 | பு.சா.2 ன் நிறுவன அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது.) | பு.சா.ஆ.7 |

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து எனக்கு நன்கு தெரியும். நான் இளங்கலை பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் கேரளா மண்டல முழுவதும் விற்பனை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் சாய்ராம் நிறுவனத்தை தவிர வேறு நிறுவனங்களில் மேலாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல.

நான் மேலாளராக பணிபுரியும் நிறுவனம் ஆயுர்வேத மருந்து விற்கும் நிறுவனம் என்றால் சரிதான். எங்களது நிறுவனத்தில் தயாரிக்கும் பொருட்களை வைப்பதற்கு கேரளாவில் குடோன் இல்லையென்றால் சரிதான். மருத்துவர்கள் மற்றும் மருந்து கடைகள் உள்ளிட்டவற்றில் நாங்கள் எங்கள் நிறுவன பொருட்களை விற்பனை செய்ய அணுகுவோம் என்றால் சரிதான்.

மருத்துரோ மருந்து கடைகள் அல்லாத நபர்களுக்கு நாங்கள் இந்த மருந்தை கொடுப்பதில்லை என்றால் சரிதான். நாங்கள் மருந்து சப்ளை செய்யும் இன்வாய்ஸ்ல் மருத்துவர் பெயரோ மருந்து கடையின் பெயர் இருந்தால் மட்டும் சப்ளை செய்வோம் என்றால் சரிதான்.

எனது நிறுவன மருந்து பொருட்களை விற்க ஆர்டர் எடுப்பது மட்டும்தான் எனது வேலை என்றால் சரிதான், சில சமயங்களில் விற்பனையாளர் இல்லாத சமயத்தில் நான் மருந்துகளை விற்பேன். மேற்படி மருந்துகளை விற்கும்போது சில நபர்களிடம் பாதுகாப்பிற்காக காசோலை வாங்குவோம் என்றால் சரிதான்.

புசாஆ.5 ஆவணத்தை குறியீடு செய்ய எனக்கு தகுதியில்லையென்றால் சரியல்ல. ஷாலி ஷஜீர் மருத்துவம் படித்துள்ளாரா என்றால் இல்லை, கேரளாவை பொருத்துவரை நாட்டு மருத்துவர்கள் தான் அதிகம். மருத்துவர்கள் மிகவும் குறைவு. ஷாலி ஷஜீர் நாட்டு மருத்துவர் ஆவார். புசாஆ.5 ஆவணத்தில் உள்ள இடத்திலிருந்துதான் அவர் வைத்தியம் பார்க்கிறார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.